மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனல் தொழிற்துறை அமைச்சர் இவ்வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்யும்பொழுது விவசாயிகள் இத்திட்டத்திற்காக விண்ணப்பித்தார்கள்.

(இ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

Vilangudi-Thirumanur Bridge, Thanjavur district

* 47. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the construction of the Vilangudi-Thirumanur Bridge, Thanjavur District has been completed;

(*b*) if so, the reason for the long delay of its inaugural function; and

(*c*) the date from which buses will be premitted to ply through the bridge ?

தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம் கட்டி முடிக்கப் பட்டு விட்டதா ?

(இ) ஆமெனில், அதன் திறப்பு விழா பல மாதங்களாக தாமதப் பட்டிருப்பதின் காரணமென்ன ?

(உ) எப்பொழுது முதல் பேருந்துகள் அப்பாலத்தின் வழியே செல்ல அனுமதிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ), (இ) & (உ) ஆம். அணுகு சாலை இன்னும் பலதரப்பட்ட சில்லறை வேலைகள் உட்பட பால வேலை 10—8—1973 தேதி அன்றுதான் முற்றுப்பெற்றது. 19—8—1973-ம் நாளன்று இப்பாலத்தின் திறப்புவிழா நடைபெற்றது. 20—8—1973-ம் நாள் முதல் பேருந்துகள் செல்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அந்தப் பாலம் திறக்கப்பட்டாலும்கூட, சென்ற மாதம் அதில் வருகிறபோது பாலத்திற்குப் பக்கத்தில் அணுகு பாலம் வேண்டுமென்ற காரணத்தால், அதில் கார்கள் போகாது என்று தெரிவித்தார்கள். அடிக்கடி இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பேருந்துகள் செல்வதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் சொல்வது பற்றி விசாரிக்கலாம்.

வினா எண் 48.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, வினா 48-ஐ நாளை வரையில் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Is not the answer to question 48 ready now?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Mr. Chairman, Sir I request the Hon. Chairman to postpone this question to to-morrow, as I do not find my reply in my file.

MR. CHAIRMAN : The Hon. Minister must ask the concerned department about this.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Mr. Chairman, Sir, may I reques that this question be postponed to to-morrow?

MR. CHAIRMAN : Yes.

Production of Peat-based Inoculants

*49. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Agricultural University, Coimbatore has undertaken the production of peat-based inoculants; and

(*b*) if so, the details thereof ?

மக்கிய தாவரங்களிலிருந்து பயிர்களுக்கு நுண்ணுயிர்களை உற்பத்தி செய்தல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மக்கிய தாவரங்களிலிருந்து பயிர்களுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்களை (Peat-based inoculants) உற்பத்தி செய்யும் பணியை மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?